# திருவாசகமும் மணிவாசகரும்

தவத்திரு கி. ஞானசூரியன்
இலண்டன்

உலகத்தில் மக்களாகப் பிறந்தவர்கள், அந்தப் பிறவியினால் பெற வேண்டிய முழுப்பயனையும் பெறுவதற்குத் துணை செய்வதற்காக, இறைவன் திருவருளால், பல வேறு நாடுகளிலும், பல வேறு காலங்களிலும், பல வேறு மொழிகளிலும், தெய்வ மணம் வீசும் பல நூல்கள் தோன்றியுள்ளன. அவற்றுள் ஒரு சில, மக்கள் உள்ளத்திலேயே நிலைத்து நின்று, காலம், இடம் என்ற பகுப்புக்களை எல்லாம் கடந்து, ஒளி வீசுகின்றன. அவற்றை ' ஒளி நூல்கள் ' எனக் கூறலாம். அவை மக்கள் இனத்துக்கே பொது உடைமையாகும். அத்தகைய உலக ஒளி நூல்களுள் ஒன்றாக, தமிழ் நாட்டில் தமிழ் மொழியில் தோன்றியது 'திருவாசகம்' என்னும் உயர்ந்த நூல். தமிழகத்தில், சைவ நன்மக்களுடைய முதல் நூல்களாகத் திகழும் ' பன்னிரு திருமுறைகளுள் ' எட்டாவது திருமுறையாக இத்தெய்வநூல் அமைந்துள்ளது. இது, பல நூற்றாண்டுகளாக, பல நூறாயிரம் மக்களுக்கு ஆறுதலும் , அமைதியும் , தெய்வ உணர்ச்சியும் அளித்து , மக்களிடத்து நல்ல பண்புகள் வளர்வதற்கு உதவியாக இருந்துவருகிறது.

இந்த அருள் நூல், பல தலைப்புகளில், ஐம்பத்தொரு பகுதிகளாகப் பிரிக்கப் பெற்றிருக்கிறது. இதன் செய்யுள் தொகை அறுநூற்று ஐம்பத்தாறு ஆகும். ஆசிரியப்பா, வெண்பா, கலிப்பா முதலிய பாட்டு வகைகளை இந்நூலுள் காணலாம். நூல் முழுவதும் மூவாயிரத்து முந்நூற்று இருபத்தேழு அடிகளில் அடங்கி விடுகின்றது இதன் செய்யுள்கள், செஞ்சொற்கள் அழகுபெற அமைந்த மணிமொழிகளால் ஆக்கப்பெற்று, படிக்கும் நாவிற்கும், கேட்கும் செவிக்கும், கற்கும் சிந்தைக்கும் இன்பம் தருவனவாகும். மேலும், இவை அரிய கருத்துக்களையும் உயரிய எண்ணங்களையும் எளிமையாக உள்ளத்தில் செலுத்தி, உணர்ச்சிக்கு உணவும் ஊக்கமும் கொடுத்து, வாழ்க்கை நெறியைத் தூய்மைப்படுத்தி, வளமுறச் செய்யும், ஆற்றலுடையனவாகவும் இருக்கின்றன. ' திருவாசகத்துக்கு உருகார் ஒரு வாசகத்துக்கும் உருகார் ' என்றும், 'மனம் கரைத்து மலம் கெடுக்கும் வாசகம்" என்றும் வழங்கும் மொழிகள் இந்நூலின் சிறப்பையும் பரப்பையும் நன்கு தெரிவிப்பன ஆகும்.

இந்தத் தெய்வத் தமிழ்மறையை, உலகுக்கு அருளியவர் 'திருவாதவூரர்', 'மாணிக்கவாசகர்', 'ஆளுடைய அடிகள்' என்ற காரணப் பெயர்களால் விளங்கும் ஞானவள்ளலாவார். இவரைச் சமயக் குரவர்கள் நால்வருள் ஒருவராக, சைவ சமயத்தார் போற்றி, வழிபாடு செய்வார்கள். சில சிவன் கோயில்களில் இவருக்காகச் சிறப்பு விழாக்களும் நடைபெறுகின்றன. இவருடைய பெயரால் அமைந்துள்ள மடங்களைத் தமிழ் நாட்டில் பல இடங்களிலும் காணலாம். இவரைப் பற்றிய பல புராணக் கதைகளும் வழங்குகின்றன. திருவிளையாடற் புராணம், திருவாதவூரர் புராணம் முதலியவற்றுள் இவரைச் சூழ்ந்துள்ள பல கதைகளைக் காணலாம். இவையன்றி, வரலாற்று முறையில் இவருடைய வாழ்க்கை முதலியவற்றுள் நாம் தெரிந்துகொள்ள வேண்டியவற்றை விளக்கும் ஆதாரங்கள் மிகமிகக் குறைந்தனவே ஆகும்.

இப் பேரருளாளர் பாண்டி நாட்டில் பல அறிஞர்களுக்குப் பிறப்பிடமும் உறைவிடமுமாக விளங்கிய 'திருவாதவூர்' என்னும் ஊரில் தோன்றியவர்; உலகியல் நூல்களையும் சமய நூல்களையும், தத்துவ நூல்களையும் நன்கு பயின்றவர்; பல வேறுபட்ட கருத்துஉடையவர்களோடும் கலந்து பயின்று உண்மை காணும் முயற்சியில் இளமையில் ஈடுபட்டவர்; அரசர்களோடு

நெருங்கிப் பழகி உலகியலில் உயர்ந்த நிலைகளிலிருந்து, ஏதோ மாறுபாட்டால் அந்த நிலைகளை விடுத்து, அடியவர் கூட்டமும் தெய்வ வழிபாடுமே நிலையான பேற்றை அளிக்க வல்லன என்னும் துணிவுகொண்டு, தம் வாழ்க்கையைத் தெய்வத் தொண்டுக்கே உரிமையாக்கியவர்; புறம்பான தோற்றங்களில் புலன்களைப் போகவொட்டாமல் தடுத்து, அகத்தே தோன்றும் பேரொளியைக் கொண்டு, இறைவனைக் காணும் முயற்சியில் ஈடுபட்டவர்; அவ்வாறு முயலும்போது தாம் பெற்ற இன்பத்தை உலகத்தாரும் பெற வேண்டும் என்னும் பரிவால், சொல்லுக்கு அடங்காதவற்றைச் சொல்லால் வெளியிட முயன்றவர்;எல்லாப் பருவத்தினரும், எல்லா மனநிலை உடையவரும், எல்லாச் செயல்களிலும் தெய்வ உணர்ச்சி கொண்டிருக்கவேண்டும் என்னும் பெருநோக்கம் உடையவர்; இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக, துயில் எழும்போதும், புனலாடும்போதும், விளையாடும்போதும் பயன் படுவதற்காகப் பல வகையான பாடல்களை அருளியவர். சிவபெருமான் கோயில் கொண்டருளிய பல திருப்பதிகளுக்கும் சென்று வணங்கும் பழக்கம் உடையவர்; திருப்பெருந்துறையில் பெரிதும் ஈடுபாடு உடையவர்; பின்னர், தில்லையிலேயே நிலையாகத் தங்கி, கூத்தப்பிரானை வணங்கி, அவன் திருவருளில் கலந்தவர் என்ற அளவில் தான் நாம் இப்போது வரலாற்று முறையில் கூறலாம்.

நன்றி: விடுதலைப்பேறு